முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

OS 45/2023

நாள்: 17-03-2025

வாதி தரப்பு 1வது சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி G.ரேவதி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கீதாகிருஷ்ணன் | வயது | : | 57 |
| தந்தை பெயர் | : | சுந்தரவரத ரெட்டி | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | பிள்ளையார்பட்டி | தொழில் | : | விவசாயம் |

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) என் தகப்பனாரோ என்னுடைய மற்ற சகோதர சகோதரிகளோ பிரதிவாதி பெயரிலோ அல்லது அவரின் தந்தை பெயரிலோ எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) பிரதிவாதி எனக்கு உறவினர் இல்லை என்றால் சரிதான்-

3) வா.சா.ஆ.1 ஐ அனுசரித்து வா.சாஆ.3ல் எந்த குறிப்பும் எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

4) வா.சா.ஆ.8 மூலமாக தாவா சொத்தின் ஒரு பகுதியைதான் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 மூலமாக என்னிடம் கிரயம் பெற்ற அந்தோணியப்பா இந்த வழக்கில தரப்பினர் இல்லை என்றால் சரிதான்.

5) அந்தோணியப்பா பிரதிவாதிக்கு எதிராகவோ அவரின் சகோதர சகோதரிக்கு எதிராகவோ எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) வா.சா.,ஆ.3ல் தென்னை மரங்கள் பற்றி எழுதப்படவில்லை என்றால் சரிதான்.3வது அயிட்ட சொத்தும் வா.சா.ஆ.3ல் பூர்விக சொத்து என்னுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) தென்னை மரங்கள் பட்டுவிட்டது என்பதை காட்டுவதற்கு கிராமநிர்வாக அதிகாரியின் சான்று தாக்கல் செய்துள்ளேன்.

8)வா.சா.ஆ.3ல் உயர்மின்கோபுரம் இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

9) வா.சா.ஆ.1,3,8 ஆகிய ஆவணங்களில் பிரதிவாதியோ அவரது வகையாறாவோ கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரிதான். அதுபோல் பிரதிவாதியின் வகையறாவை பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

10) வா.சா.ஆ.1,3, 8 ஆவணங்கள் பிரதிவாதியையோ அவரது குடும்பத்தாரையோ கட்டுபடுத்ததாது என்று சொன்னால் சரியல்ல.

11) என் அனுபவத்தை இடையூறு செய்யதாக சொல்வதற்கு காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

12) பிரதிவாதியோ அவரது முன்னோர்களோ வழக்கின் உரிமை மற்றும் சுவாதீனத்தை இழக்கவில்லை என்றால் சரியல்ல.

13) மாவட்ட பதிவாளரிடம் இருந்து அறிவிப்பு வந்ததது. அந்தஅறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த அறிவிப்பை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும்.

14) அந்த அறிவிப்பு வந்தபிறகுதான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

15) எந்த தேதி எந்த மாதம் எந்த வருடத்தில் இருந்து நான் ஆக்ரமித்து அனுபவத்தில் உள்ளேன் என்பதை சொல்லவில்லை என்றால் வருடத்தை சொல்லி உள்ளேன்.

16)நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

17) பிரதிவாதிக்கு எதிராக தவறான வழக்கு தாக்கல் செய்ததால் பிரதிவாதிக்கு நஷ்ட ஈட்டு தொகையும் வழங்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

18) என் தாயார் அவராகவே எழுதிக்கொண்டு ஆவணத்தின் அடிப்படையில் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

19) தாவா சொத்தின் 4 பக்க எல்லைதாரர்கள் யார் என்று எனக்கு தெரியாது.

20) நான் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. தேவையான நபர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/கா.பூர்ண ஜெய ஆனந்த்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்.